**செ. கு. எண்: 025** **நாள் :20.01.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.1.2016

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், காரப்பாக்கம் கிராமம், பழைய மகாபலிபுரம் சாலை அருகே 19.1.2016 அன்று கழிவு நீர் தொட்டியை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது விஷ வாயு தாக்கியதில், ஒக்கியம் துரைபாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. கைலாசம் என்பவரின் மகன்கள் குமார், சரவணன், திரு. வேதாச்சலம் என்பவரின் மகன் முருகன், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவாங்கூர் பகுதியைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்பவரின் மகன் ராஜேஷ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சம்பவத்தில் காயமடைந்துள்ள சோழிங்கநல்லூர் வட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. விஜி என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50,000/- ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**